ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

**ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව**
**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்**
**Department of Examinations, Sri Lanka**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2026
General Certificate of Education (Adv. Level) Examination, 2026

ඉස්ලාම් ශිෂ්ටාචාරය I
**இஸ்லாமிய நாகரிகம் I**
Islamic Civilization I

**47 T I**

පැය දෙකයි
**இரண்டு மணித்தியாலம்**
*Two hours*

**அறிவுறுத்தல்கள்:**

- **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
- **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தை மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி** (X) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** சமயத்தைக் குறிக்கும் 'Religion' என்ற பதத்தின் மூல மொழிகள்
(1) லத்தீன், ஆங்கிலம், இத்தாலி. (2) அறபு, லத்தீன், போர்த்துக்கேயம்.
(3) ஸ்பானியம், பிரஞ்சு, ஜப்பான். (4) சமஸ்கிரதம், பாலி, தமிழ்.
(5) பாரசீகம், துருக்கி, மலாய்.

**2.** பின்வரும் விடயங்களைக் கருதுக.
A - பண்பாடு என்பது அகவெளிப்பாடாகும், நாகரிகம் என்பது புறத்தோற்ற வெளிப்பாடாகும்.
B - பண்பாடு மாற்றமுறாது, நாகரிகம் மாற்றமடையும்
C - பண்பாடு லோகாயதமானது, நாகரிகம் மேற்கத்தேயமானது.
D - பண்பாடு என்பது சிந்தனை, உணர்வு ஆகியவற்றுடன் தொடர்புடையது; நாகரிகம் என்பது அறிவியல் கலைகள், நடை உடை பாவனை போன்றவற்றுடன் தொடர்புடையது.
E - மனித ஆற்றல், தகைமை என்பன பண்பாடாகும்; மனிதன், பௌதீக வளங்கள், காலம் ஆகிய மூன்றினதும் கூட்டிணைப்பு நாகரிகமாகும்.
இவற்றுள் பண்பாடு-நாகரிகம் ஆகிய இரண்டிற்கும் இடையிலான தொடர்பைக் குறிக்கும் தொகுதி
(1) A, B, C, D (2) A, B, D, E (3) A, B, E, D (4) A, C, B, D (5) A, C, D, E

**3.** ஜாஹிலிய்யா காலத்தில் "அய்யாமுல் அரப்" என்பதானால் கருதப்பட்டவை
(1) துக்க தினங்கள்
(2) கொண்டாட்ட தினங்கள்
(3) க.்.பாவில் மக்கள் ஒன்றுதிரண்ட நாட்கள்
(4) சந்தை நாட்கள்
(5) போராட்ட நாட்கள்

**4.** மஸ்ஜித் கட்டடக் கலைக்கான எடுத்துக்காட்டு
(1) நிழாமிய்யா (2) அல்-ஹம்ரா (3) தாஜ்மஹால்
(4) குப்பதுஸ் ஸஹ்ரா (5) குவ்வதுல் இஸ்லாம்

**5.** இஸ்லாமிய நாகரிகம் பற்றி கீழைத்தேய ஆய்வாளர்களின் பார்வையை பிரதிபலிக்கும் ஒழுங்கு
(1) நாகரிகம் ⟶ அரசு ⟶ சமயம் (2) அரசு ⟶ சமயம் ⟶ நாகரிகம்
(3) நாகரிகம் ⟶ சமயம் ⟶ அரசு (4) சமயம் ⟶ அரசு ⟶ நாகரிகம்
(5) அரசு ⟶ நாகரிகம் ⟶ சமயம்

**6.** ஸஹீஹுல் புகாரி பெயர்குறித்துள்ள, அல்குர்ஆனை மனனமிட்ட நபித்தோழர்களுள் சிலரைக் குறிக்கும் பொருத்தமான விடை
(1) முஆத் பின் ஜபல், ஸைத் பின் தாபித், உபை பின் க.்.ப், அபூதர்தா (ரழி)
(2) அப்துல்லாஹ் பின் மஸ்ஊத், அபூஸைத், அபூதர்தா, அலி (ரழி)
(3) உபை பின் க.்.ப், முஆத் பின் ஜபல், ஸைத் பின் தாபித், உமர் (ரழி)
(4) அபூதர்தா, ஸாலிம் பின் ம.்.கல், உபை பின் க.்.ப், அபூ ஹுரைரா (ரழி)
(5) அப்துல்லாஹ் பின் மஸ்ஊத், முஆத் பின் ஜபல், ஸைத் பின் தாபித், அப்துல்லாஹ் பின் உமர் (ரழி)

Past Papers Wiki



**7.** கிராஅத், நாஸிஹ் வல்மன்ஸூஹ், ஸபபுன் நுஸூல் முதலிய கலைகளில் தேர்ச்சி பெற்ற நபித்தோழர்
(1) அபூ ஹுரைரா (ரழி) (2) முஸ்அப் பின் உமைர் (ரழி)
(3) அப்துர் ரஹ்மான் பின் அவ்ப் (ரழி) (4) ஸைத் பின் தாபித் (ரழி)
(5) உஸ்மான் பின் அப்பான் (ரழி)

**8.** தஹ்லீலுல் அஹ்காம் எனப்படுவது
(1) அல்குர்ஆன் அருளப்பட்ட ஒழுங்கை தெளிவுபடுத்தல்.
(2) அல்குர்ஆன் தொகுக்கப்பட்ட ஒழுங்கை தெளிவுபடுத்தல்.
(3) அல்குர்ஆன் இயற்றிய சட்டங்களுக்கான காரணங்களைத் தெளிவுபடுத்தல்.
(4) அல்குர்ஆனிய சட்ட வசனங்களை வகைப்படுத்துவதற்கான முறை.
(5) அல்குர்ஆனின் கிராஅத் முறையினை தெளிவுபடுத்தல்.

**9.** பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள தகவல்களைக் கருதுக.

| நபித்தோழர்கள் | | சிறப்புப் பெயர்கள் |
|---|---|---|
| (i) | ஹுதைபதுல் யமானி (ரழி) | A - ஸைபுல்லாஹ் |
| (ii) | காலித் பின் வலீத் (ரழி) | B - அமானுல் உம்மத் |
| (iii) | உஸ்மான் (ரழி) | C - ஸாஹிபுஸ்ஸிர் |
| (iv) | பிலால் (ரழி) | D - ஜாமிஉல் குர்ஆன் |
| (v) | அபூ உபைதா (ரழி) | E - முஅத்தின் அர்ரஸூல் |

மேலே அட்டவணையில் தரப்பட்டுள்ள நபித் தோழர்களின் ஒழுங்கிற்கேற்ப அவர்கள் பற்றிய சிறப்புப் பெயர்கள் ஒழுங்குபடுத்தியுள்ள தெரிவு யாது?
(1) A, C, D, B, E (2) B, D, E, C, A (3) C, A, D, E, B (4) D, A, E, B, C (5) E, D, A, C, B

**10.** அழகியல் தொடர்பில் ஸீனத் என்பது
(1) அலங்காரம் (2) அழகு (3) வடிவம் (4) மாதிரி (5) பாவனை

**11.** ரப்பானியத் என்பது
(1) துறவற நிலையை அடைதல்.
(2) தியான நிலையை அடைதல்.
(3) சிந்தனையும் செயற்பாடும் ஒன்றிணைதல்.
(4) மன ஒருமைப்பாடு கொண்டிருத்தல்.
(5) நிர்வாண நிலையை அடைதல்.

**12.** புஸ்தாத் நகரம் அமைந்துள்ள பிரதேசம் ஏது?
(1) டமஸ்கஸ் (2) கூபா (3) எகிப்து (4) பக்தாத் (5) சிரியா

**13.** பின்வருவனவற்றைக் கருதுக.
A - அல்லாஹ்வின் தாத்தும் ஸிபாத்தும் ஒன்றே.
B - பெரும்பாவம் செய்தவன் மு∴மின் அல்ல.
C - அல்குர்ஆன் படைக்கப்பட்டது.
D - அவ்லியாக்கள் கராமத் உடையவர்கள்.
E - அல்லாஹ்வை மறுமையில் பார்க்க முடியாது.
F - பாவிகள் ஷபாஅத் மூலம் மறுமையில் பயன்பெறுவர்.
இவற்றுள் மு∴தஸிலாக்களின் பிரதான கொள்கையை உள்ளடக்கிய தொகுதியை தெரிவுசெய்க.
(1) A, B, C, E (2) A, B, D, E (3) A, B, D, F (4) B, C, D, F (5) B, D, E, F

**14.** பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள தகவல்களைக் கருதுக.

| பதவி | | பணி |
|---|---|---|
| (i) | அந்தரங்க துரே | A - கிராமத் தலைமை |
| (ii) | லேகம் | B - அரசாங்க நிர்வாகம் / ராஜதானி |
| (iii) | மடிகே பத்த | C - ஒட்டகப்படை |
| (iv) | ஒட்டு பந்திய | D - மருத்துவச் சேவை |
| (v) | பெஹெத்கே முகாந்திரம் நிலமே | E - வணிகம் |

மேலே அட்டவணையில் தரப்பட்டுள்ள பதவிகளின் ஒழுங்குக்கேற்ப அவற்றின் பணிகள் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ள தெரிவு யாது?
(1) A, C, B, D, E (2) B, D, C, E, A (3) C, B, A, E, D (4) E, A, B, C, D (5) E, A, C, B, D

[பக். 3 ஐப் பார்க்க

004992

**15.** அரேபியாவில் சிலைவணக்கத்தை அறிமுகப்படுத்திய நபர்
(1) அஸ்வத் அன்ஸி
(2) முஸைலமா
(3) அம்ரு பின் லுஹை
(4) சஜா
(5) துலைஹா பின்த் குவைலித்

**16.** தொன்மைக்கால இலங்கையில் குடியேறிய பிரதான இனக்குழுக்களைக் கொண்ட தொகுதி
(1) ஆரியர்கள், திராவிடர்கள், அறேபியர்கள்.
(2) ஆரியர்கள், ஐரோப்பியர்கள், அறேபியர்கள்.
(3) போர்த்துக்கீசர்கள், திராவிடர்கள், அறேபியர்கள்.
(4) ஆரியர்கள், ஒல்லாந்தர்கள், அறேபியர்கள்.
(5) ஐரோப்பியர்கள், ஒல்லாந்தர்கள், அறேபியர்கள்.

**17.** நபி (ஸல்) அவர்களின் காலத்தில் ஹதீஸ்களைப் பாதுகாப்பதற்கு கையாளப்பட்ட வழிமுறை **அல்லாதது**
(1) மனனமிடல்
(2) நூலுருப்படுத்தல்
(3) எழுதிவைத்தல்
(4) நடைமுறைப்படுத்தல்
(5) தம்மிடையே பகிர்ந்து கொள்ளல்

**18.** அஸபிய்யா என்ற பதத்தின் பொருள்களுள் ஒன்று **அல்லாதது**
(1) இன உறவை பாதுகாத்தல்
(2) ஜாஹிலிய்ய சமூகக் கட்டமைப்பு
(3) உறுப்பினர் மீதான கோத்திர ஆதிக்கம்
(4) கோத்திர விசுவாசம்
(5) கொள்கை வழி உறவு

**19.** ஒரு குடும்பத்தின் தலைமைத்துவம் பற்றிய இஸ்லாத்தின் கருத்து நிலை, அது
(1) தந்தைக்கு மட்டும் உரியது.
(2) தாய்க்கு உரியது.
(3) தந்தைக்கு உரியது ஆயினும் தாயும் பொறுப்புடையவள்.
(4) குடும்ப அங்கத்தவர்கள் அனைவருக்கும் உரியது.
(5) பொருளாதார ஆதரவு அளிப்பவருக்கு உரியது.

**20.** பின்வருவனவற்றுள் ஷரீஆ தொடர்பான **பொருத்தமற்ற** கூற்றைத் தெரிவுசெய்க. அது
(1) மனித நடத்தைகளை ஒழுங்குபடுத்தும் நெறிமுறையாகும்.
(2) அனைத்து துறைகளிலும் மொத்தமாக செல்வாக்குச் செலுத்துகிறது.
(3) நம்பிக்கைக் கோட்பாடு, சட்டம், பண்பாடு ஆகிய அனைத்தையும் உள்ளடக்கியது.
(4) கால, தேச மாறுபாடுக்கு ஏற்ப மாறா நிலைகொண்ட வழிகாட்டலாகும்.
(5) மனித வாழ்வின் அனைத்து நடத்தைகள் பற்றிய அல்லாஹ்வின் விருப்பமாகும்.

**21.** கிலாபத் ராஷிதா கால ஆட்சியின் கீழ் காணப்பட்ட பிரதான நகரங்களுள் ஒன்று
(1) பக்தாத்
(2) இஸ்தான்பூல்
(3) லாஹூர்
(4) புஸ்தாத்
(5) சிசிலி

PAST PAPERS WIKI

**22.** அகபா உடன்படிக்கைகளின் பிரதான விதி **அல்லாதது**
(1) கொள்கைப் பற்றுறுதி
(2) ஒழுக்கக் கட்டுப்பாடு
(3) தலைமைத்துவப் பாதுகாப்பு
(4) ஒன்றுபட்ட சமூகமாக வாழ்வதற்கான உறுதிமொழி
(5) குறைஷியர்களின் மேலாதிக்கம்

**23.** பின்வருவனவற்றுள் 'சிரமங்கள் சட்டத்தை தளர்த்தும்' எனும் ஷரீஆ விதியை குறிப்பது
(1) அல் யகீனு லா யஸீலு பிஷ்ஷக்
(2) அல் உமூரு பிமகாஸிதிஹா
(3) அல் ஆதாது முஹக்கமா
(4) அல் லரரு யுஸாலு
(5) அல் மஷக்கத்து தஜ்லிபுத் தய்ஸீர்

**24.** உமையா ஆட்சியின் உண்மையான நிர்மாணி என பாராட்டப்பட்ட ஆட்சியாளர்
(1) அப்துல் மலிக் பின் மர்வான்
(2) வலீத் பின் அப்துல் மலிக்
(3) உமர் பின் அப்துல் அஸீஸ்
(4) யஸீத் பின் முஆவியா
(5) ஹஜ்ஜாஜ் பின் யூசுப்

01020000120114992

[பக். 4 ஐப் பார்க்க

Past Papers Wiki



25. ஷீஆ சிந்தனையை நிலை நாட்டுவதற்காக நிறுவப்பட்ட சிற்றரசு
(1) கஸ்னவி (2) செல்ஜூக் (3) அய்யூபி
(4) புவைஹி (5) பாதிமி

● பின்வருவோர் தஜ்தீத் பணியில் ஈடுபட்ட முக்கிய ஆளுமைகளாகும். இவர்களை அடிப்படையாகக் கொண்டு **26 - 30** வரையான வினாக்களுக்கு விடை தருக.

A - உமர் பின் அப்துல் அஸீஸ் (ரஹ்)
B - முஹம்மத் பின் அப்துல் வஹ்ஹாப் (ரஹ்)
C - அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்)
D - இமாம் ஹஸனுல் பஸரி (ரஹ்)
E - இமாம் கஸ்ஸாலி (ரஹ்)
F - ஜமாலுத்தீன் ஆப்கானி (ரஹ்)
G - முஹம்மத் அப்துஹு (ரஹ்)
H ஷேய்க் அஹ்மத் ஸிர்ஹிந்தி (ரஹ்)
I - இமாம் ஹஸனுல் பன்னா (ரஹ்)
J - ரஷீத் ரிழா (ரஹ்)
K - மௌலானா இல்யாஸ் (ரஹ்)
L - இமாம் இப்னு தைமிய்யா (ரஹ்)
M - ஷாஹ் வலியுல்லாஹ் (ரஹ்)
N - மௌலானா ம.்.தூதி (ரஹ்)
O - பதியுஸ்ஸமான் சஈத் நூர்ஸி (ரஹ்)

26. கி.பி. 19ம் நூற்றாண்டில் தஜ்தீத் பணிக்கு பங்காற்றியவர்களைக் கொண்ட தெரிவு யாது?
(1) B, C, D (2) C, N, F (3) D, K, L (4) E, G, J (5) F, G, N

27. இந்தியாவில் இஸ்லாமிய மறுமலர்ச்சிக்கு பணியாற்றியவர்களைக் கொண்ட தெரிவு யாது?
(1) E, I, O (2) F, M, O (3) G, B, C (4) H, K, M (5) I, K, N

28. நவீனகாலத்தில் இஸ்லாமிய அமைப்புகளை தோற்றுவித்தோர்களைக் கொண்ட தெரிவு யாது?
(1) E, H, M (2) F, I, N (3) G, E, B (4) H, F, O (5) I, K, N

29. தஸவ்வுப் வழிமுறையை அடிப்படையாகக் கொண்டு சீர்த்திருத்தப் பணிகளை முன்னெடுத்தோரைக் கொண்ட தெரிவு யாது?
(1) B, F, J (2) C, E, O (3) E, I, L (4) F, C, O (5) G, J, M

30. தூய அகீதாவை பாதுகாக்க பங்காற்றியோரைக் கொண்ட தெரிவு யாது?
(1) B, H, L (2) C, E, J (3) D, G, N (4) E, C, I (5) F, K, O

31. பின்வரும் விடயங்களைக் கருதுக.
A - ஈருலக நலன்களுக்காக உதவிசெய்தல்
B - சுக துக்கங்களில் பங்குகொள்ளல்
C - இரண்டறக்கலந்து இணைந்து வாழுதல்
D - தொடர்பாடல்களை ஏற்படுத்திக் கொள்ளல்
E - அழைப்புகளை ஏற்று மதித்து நடத்தல்
F - உரிமைகளைப் பேணுதல்

மேற்குறித்தவற்றுள் ஒருவர் அயலவர்களுடனான உறவில் கடைப்பிடிக்க வேண்டிய இஸ்லாமிய நெறிமுறைகளைக் கொண்ட தொகுதி யாது?
(1) A, B, C, E, F (2) B, C, D, A, E (3) C, B, A, E, F
(4) D, B, F, E, A (5) E, C, A, F, D

32. "நிச்சயமாக ஒரு காலம் வரும் அப்போது ஒரு பெண் அச்சமின்றி சன்ஆவிலிருந்து ஹழரமௌத் வரை தன்னந்தனியாகச் செல்வாள்" எனும் நபி வாசகம் உணர்த்துவது
(1) நெடுஞ்சாலை வசதியின் மேம்பாடு
(2) அரேபியாவின் பொருளாதார விருத்தி
(3) பெண்களின் பாதுகாப்புடன் கூடிய நல்லாட்சி
(4) பூகோளமயமாகுதல்
(5) போக்குவரத்து சாதனங்களின் வளர்ச்சி

[பக். 5 ஐப் பார்க்க

**33.** பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள தகவல்களைக் கருதுக.

| | அல்குர்ஆன் வசனங்கள் | சுட்டும் விடயம் |
|---|---|---|
| (i) | நாம் ஆதமின் சந்ததியினரைக் கண்ணியப்படுத்தினோம் | A - பன்முகத்தன்மை |
| (ii) | மார்க்கத்தில் நிர்ப்பந்தம் கிடையாது | B - பொது நீதி |
| (iii) | உங்களது மொழிகளும், நிறங்களும் வித்தியாசமாக இருப்பதும் அவனது அத்தாட்சிகளாகும் | C - மானிட கௌரவம் |
| (iv) | உமது இரட்சகன் நாடியிருந்தால் அனைத்து மக்களையும் ஒரே சமூகமாக ஆக்கியிருப்பான் | D - பல்கலாசாரம் |
| (v) | நீர் மோசடிகாரர்களுக்காக வாதிடுபவர்களில் ஒருவராக இருக்காதீர் | E - மதச் சுதந்திரம் |

மேலே அட்டவணையில் தரப்பட்டுள்ள அல்குர்ஆன் வசனங்களின் ஒழுங்குக்கேற்ப அவை சுட்டும் விடயங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள சரியான தெரிவு யாது?

(1) A, D, E, B, C (2) B, E, D, C, A (3) C, E, D, A, B
(4) D, C, E, B, A (5) E, A, B, C, D

**34.** பின்வருவனவற்றுள் முஸ்தஹப் ஆன விடயங்களைக் கொண்ட பகுதி

(1) ஹாஜியாத் (2) ழரூரிய்யாத் (3) முபாஹாத்
(4) முன்கராத் (5) ம.்ரூபாத்

**35.** அப்பாஸிய ஆட்சியில் அதிகாரமிக்க பிரதம அமைச்சராக செயற்பட்டவர்

(1) யஹ்யா பர்மகி (2) நிஸாமுல் முல்க் தூஸி
(3) அபூ முஸ்லிம் அல் குராசானி (4) நஜ்புத்தீன் அய்யூபி
(5) பத்ருல் ஜமாலி

**36.** மக்காவை மையப்படுத்திய தப்ஸீர் வகுப்பின் பிரதானியாக காணப்பட்ட நபித்தோழர்

(1) உபை பின் க.்ப் (ரழி)
(2) அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரழி)
(3) அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரழி)
(4) அப்துல்லாஹ் பின் உமர் (ரழி)
(5) ஸைத் பின் தாபித் (ரழி)

**37.** குதுபுல் மினாரை நிர்மாணித்த மொகலாய மன்னன்

(1) ஔரங்கஸீப் (2) ஹுமாயூன் (3) சாஜஹான்
(4) குதுபுத்தீன் ஐபக் (5) சுல்தான் தைமூர்

**38.** சூபி சிந்தனையின் அடிப்படையில் வந்த தப்ஸீர்களுக்கான முன்னோடிக் கிரந்தம்

(1) தப்ஸீர் ஜலாலைன் (2) அல் பஹ்ருல் முஹீத் (3) ஹகாஇகுத் தப்ஸீர்
(4) மபாதிஹுல் கைப் (5) பீ ழிலாலில் குர்ஆன்

**39.** கி.மு. 4ம் நூற்றாண்டுக்கு முன்னர் அரேபிய வணிக குடியிருப்புக்கள் இலங்கையில் காணப்பட்டமையை குறிப்பிடும் வரலாற்று இலக்கியம்

(1) Ceylon in Ptolemys Geography
(2) Muslim of Sri Lanka: Avenues to Antiquity
(3) History of Ceylon
(4) Ceylon of James Tennent
(5) The preaching of Islam

**40.** ஹதிஸ் வகைகளுள் அல்குர்ஆனுக்கு அடுத்த தர நிலையில் நோக்கப்படுவது

(1) ஹதீஸ் அல் குத்ஸி (2) ஹதீஸ் மஷ்ஹூர்
(3) முத்தபகுன் அலைஹி (4) ஹதீஸ் முதவாதிர்
(5) ஹதீஸ் மர்பூ.்

**41.** அறிவையும் ஆய்வையும் உச்சநிலையில் பயன்படுத்திக்கொண்ட இஜ்திஹாத் வகை

(1) அல் இஜ்திஹாத் அல் இன்திகாஇ (2) அல் இஜ்திஹாத் அன்னாகிஸ்
(3) அல் இஜ்திஹாத் அல் இன்ஷாஇ (4) அல் இஜ்திஹாத் அல் ஜுஸ்இ
(5) அல் இஜ்திஹாத் அல் முகய்யத்

**42.** பிரயாணத்தின்போது தண்ணீர் இன்றி தயம்மும் செய்து தொழுத இரு நபித்தோழர்களில் பின்னர் தண்ணீர் கிடைத்தபோதும் குறித்த தொழுகையை மீட்டித்தொழாத தோழர் பற்றிய நபி (ஸல்) அவர்களின் கூற்று
(1) சுன்னாவுக்கு முரணானது.
(2) தொழுகை நிறைவேறி சுன்னா நடைமுறைப்படுத்தப்பட்டது.
(3) தவறான இஜ்திஹாத் ஆகும்.
(4) மீட்டித் தொழுதிருக்கவேண்டும்.
(5) இரு கூலி உண்டு.

**43.** பின்வருவனவற்றுள் பிக்ஹ் துறை வளர்ச்சிக்கு பங்காற்றும் அம்சம்
(1) மனித கருத்தாக்கம்
(2) இஜ்திஹாத்
(3) அரசியல் அதிகாரம்
(4) சமூக மாற்றம்
(5) பொருளாதார மேம்பாடு

**44.** மத்ஹப் ஸஹாபி குறித்து நிற்பது
(1) கவ்லுஸ் ஸஹாபி
(2) மத்ஹப் ஷாபிஈ
(3) இஜ்மாஉஸ் ஸுகூதி
(4) இஜ்திஹாத் முத்லக்
(5) ஷரஉஸ் ஸாபிக்

**45.** ஒஸ்லர் (Osler) எனும் அறிஞர் மருத்துவத்துறையின் பைபில் எனக் குறிப்பிட்ட நூல்
(1) கானூன்
(2) அல் ஹாவி
(3) கிதாபுல் ஜுதரி வல் ஹஸ்பாஹ்
(4) கிதாபுல் மாலிகி
(5) அத்தப்ஸீர்

● **46** தொடக்கம் **50** வரையிலுள்ள ஒவ்வொரு வினாவிலும் இரண்டு கூற்றுகள் வீதம் தரப்பட்டுள்ளன. அச்சோடி பற்றிய மிகப் பொருத்தமான தொடர்பை எடுத்துக்காட்டும் சரியான விடையினைப் பின்வரும் அட்டவணையிலுள்ள இலக்கம் (1), (2), (3), (4), (5) என்பவற்றிலிருந்து தெரிவுசெய்க.

| இலக்கம் | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| (1) | சரியானது | சரியானது |
| (2) | பிழையானது | சரியானது |
| (3) | சரியானது | பிழையானது |
| (4) | பிழையானது | பிழையானது |
| (5) | சரியானது | சரியாக இருப்பதுடன் முதலாம் கூற்றை மேலும் விவரிக்கிறது. |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| **46.** | மு.்.தஸிலா பிரிவினர் அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஅத் கொள்கையிலிருந்து வேறுபட்டவர். | மு.்.தஸிலா பிரிவினர் கொள்கை ரீதியில் பல உட்பிரிவுகளைக் கொண்டுள்ளனர். |
| **47.** | பூர்வீக கால இலங்கை முஸ்லிம்கள் உள்நாட்டு வர்த்தகத்தை தம்வசம் வைத்திருந்தனர். | போர்த்துக்கீசர் காலத்தில் இலங்கை முஸ்லிம்கள் சுதந்திரமாக வர்த்தகத்தில் ஈடுபட்டனர். |
| **48.** | அப்பாஸிய ஆட்சிக் காலத்தில் இனரீதியான குழுக்களின் ஆதிக்கம் சிற்றரசுகள் தோற்றம் பெறுவதற்கு வழிவகுத்தன. | அய்யூபியர் சிலுவை வீரர்களுக்கு எதிராகப் போர் புரிந்தனர். |
| **49.** | மூச்சை அடக்கி தியானம் செய்தல் உள்ளத்தைத் பரிசுத்தப்படுத்தவும் இறைத் தொடர்பை மேம்படுத்துவதற்குமான இஸ்லாமிய வழிமுறையாகும். | உடல் வலிமையை ஏற்படுத்தும் விளையாட்டு, உடற்பயிற்சி போன்றன இஸ்லாத்தில் வலியுறுத்தப்பட்ட ஒன்றல்ல. |
| **50.** | கொள்கைச் சுதந்திரமும் மதத் தேர்வும் இறை நிராகிப்பையே வலுவூட்டும் | பல்வேறு மதப்பிரிவினர் பரஸ்பரம் உதவிக் கொள்வது சகிப்புத் தன்மையை வெளிப்படுத்தும். |

* * *

Past Papers Wiki



AL/2026/47/T-II

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2026
General Certificate of Education (Adv. Level) Examination, 2026

ඉස්ලාම් ශිෂ්ටාචාරය II
இஸ்லாமிய நாகரிகம் II
Islamic Civilization II

47 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள் :**

※ **பகுதி I** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் **பகுதி II** இலிருந்து **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

**1.** (i) அல்குர்ஆனில் இடம்பெற்றுள்ள இபாரத்துன் நஸ், இஷாரதுன் நஸ் ஆகிய சட்டங்களுக்கு **இவ்விரண்டு** உதாரணங்கள் தருக.

(ii) 'ஹதீஸ் இரண்டாவது இஸ்லாமிய சட்ட மூலாதாரம்' என்பதை நிறுவும் அல்குர்ஆன், அல்-ஹதீஸ் ஆதாரங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக.

(iii) இஜ்திஹாதின் வகைகளுள் **நான்கு** தருக.

(iv) தபஉத் தாபிஈன்கள் கால அல்குர்ஆன் விரிவுரைகளில் கவனத்தில் கொள்ளப்பட்ட விடயங்களுள் **நான்கினை** விபரிக்குக.

(v) சமூகத்துடன் தனிநபர்களை இணைப்பதற்கு நபி (ஸல்) அவர்கள் விதந்துரைத்த விடயங்களுள் **நான்கினைத்** தருக.

(04 × 5 = 20 புள்ளிகள்)

**2.** (i) ஜாஹிலிய்யாக் கால நிர்வாக ஒழுங்குகள் **நான்கினை** விளக்குக.

(ii) நுபுவத்துக்கு முன்னர் நபி (ஸல்) அவர்களின் தலைமைத்துவப் பண்புகளை எடுத்துக் காட்டும் நடவடிக்கைகள் **நான்கினை** விபரிக்குக.

(iii) குலபாஉர் ராஷிதூன்களின் தெரிவில் பேணப்பட்ட **நான்கு** வழிமுறைகளையும் விபரிக்குக.

(iv) கலீபா உமர் பின் அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்கள் பிரதான முஜத்தித் ஆகக் கருதப்படுவதற்கான நியாயங்கள் **நான்கு** தருக.

(v) அப்பாஸிய கால நகர அபிவிருத்திப் பணிகளுள் **நான்கினை** விபரிக்குக.

(04 × 5 = 20 புள்ளிகள்)

**3.** (i) இலங்கை - மத்திய கிழக்கு பிரதேசங்களுக்கிடையிலான பூர்வீக உறவுக்கான காரணிகள் **நான்கு** தருக.

(ii) சுதந்திரத்துக்கு முன்னர் கலாசாரப் பண்பாட்டுக்கு இலங்கை முஸ்லிம்கள் ஆற்றிய **நான்கு** பங்களிப்புகளைக் குறிப்பிடுக.

(iii) 'இலங்கை முஸ்லிம்கள் வர்த்தக சமூகம்' என அடையாளப் படுத்தப்படுவதற்கான பின்னணிகள் **நான்கினைக்** கூறுக.

(iv) இலங்கை முஸ்லிம்கள் பிறசமூகத்துடன் இணைந்து செயலாற்றுவதற்கான இஸ்லாமிய வழிகாட்டல்களுள் **நான்கினை** விளக்குக.

(v) உமது கருத்தில் இலங்கையில் குடும்பக் கட்டமைப்பை பேணுவதில் முஸ்லிம் பெண்களின் வகிபாகம் பற்றிய கருத்துக்கள் **நான்கினை** விளக்குக. (04 × 5 = 20 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

PAST PAPERS WIKI

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

## பகுதி II

**4.** (i) நபி (ஸல்) அவர்கள், இஸ்லாமிய அரசு ஒன்றினை மதீனாவில் தோற்றுவிக்கும் நோக்கில் மக்கா கால வாழ்வில் மேற்கொண்ட நடவடிக்கைகள் **ஐந்தினை** விளக்குக.

(ii) "கிலாபா ராஷிதா கால நிருவாக முறைகள் ஓர் முன்மாதிரி மிக்க அரசியலுக்கான எடுத்துக்காட்டாகும்." அக்கால நிர்வாக நடவடிக்கைகளுள் **ஐந்தினைக்** குறிப்பிட்டு விளக்குக.

(10 × 2 = 20 புள்ளிகள்)

**5.** (i) உமையா கலிபாக்களின் மிகப் பிரதான பங்களிப்புகள் **ஐந்தினை** விளக்குக.

(ii) செல்ஜூக்கிய சிற்றரசின் கல்வி, பண்பாட்டு பங்களிப்புகளை எடுத்துக்காட்டி விபரிக்குக.

(10 × 2 = 20 புள்ளிகள்)

**6.** (i) மருத்துவத்துறை வளர்ச்சிக்காக முஸ்லிம்கள் மேற்கொண்ட பணிகளுள் **ஐந்தினைக்** குறிப்பிட்டு விளக்குக.

(ii) இசைக்கலை பற்றிய இஸ்லாத்தின் நிலைப்பாட்டினையும் முஸ்லிம் வரலாற்றில் அதன் வளர்ச்சியையும் விபரிக்குக.

(10 × 2 = 20 புள்ளிகள்)

**7.** (i) இஸ்லாமிய நாகரிகத்தின் தேக்கநிலைக்கான **பத்துக்** காரணிகளை பட்டியற்படுத்துக.

(ii) மௌலானா இல்யாஸ் (ரஹ்), மௌலானா மௌதூதி (ரஹ்) ஆகிய இருவரினதும் சமூகப் புனரமைப்புப் பணிகளை ஒப்பிட்டு விளக்குக.

(10 × 2 = 20 புள்ளிகள்)

**8.** (i) மகாஸிதுஷ் ஷரீஆ என்பது ஷரீஆ சட்டங்களின் இலட்சியங்களையும் தத்துவங்களையும் முன்வைப்பதாகும். இது குறித்து கருத்துரைக்க.

(ii) 'ஷீஆ' அரசியல் பிரிவாக தோற்றம்பெற்று பின்னர் ஒரு கொள்கை இயக்கமாக வளர்ச்சி பெற்றது எனும் வகையில் அதன் சிந்தனைகளை விளக்குக.

(10 × 2 = 20 புள்ளிகள்)

❊ ❊ ❊

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library